# கொழும்பில் இனந்தெரியாத நபர்கள் துவக்குசூடு சந்தையில் நின்ற 5 பெண்கள் 2 ஆண்கள் காயம்

(கொழும்பு)
கொழும்பு மாவட்டம் கடுவலையில் நேற்று வாரச் சந்தை ஒன்றில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் மேற்கொண்ட திடீர் துப்பாக்கிச் சூட்டில் ஏழுபேர்படுகாயமடைந்தனர்.
இதுபற்றி தெரியவருவதாவது: கடுவல வாரச் சந்தை
(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 24 இதழ் 25
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 07 — 03 — 1993

## யு. என். எச். சி. ஆர். குழு புலிகள் இன்று சந்திப்பு

(திருநெல்வேலி)
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் இன்று காலை 11 மணிக்கு விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்து யாழ். குடாநாட்டிற்கான பாதை யைத் திறப்பது குறித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ள
(6-ம் பக்கம் பார்க்க)

## திருமலைசிறையில் ரேகணவின் குடும்பம்

(கொழும்பு)
ஜே. வி. பி. தலைவர் ரேகண விஜயவீரவின் மனைவியும் ஐந்து பிள்ளைகளும் தற்போது திருமலையில் பாதுகாப்பான சிறையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இவர்களுடன் ரேகணவின்
(6-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் யுத்தத்தை உடனே நிறுத்தி அரசியல் கைதிகளை விடுவிக்குக

## மாணவர் அமைப்பு ஐ. நா. வுக்கு மகஜர்

(பாரிஸ்)

**வடக்கு-கிழக்கில் தொடரும் சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி யுத்தத்தை உடன் நிறுத்தவேண்டுமென்றும் நாட்டின் சகல பகுதிகளிலும் அரச சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டுமெனவும் மாணவர் அமைப்பொன்று ஐ. நா. சபைக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளது.**

பிரான்ஸை தலைமையகமாக கொண்டு இயங்கும் "இலங்கையின் மனித உரிமைகளுக்கான மாணவர் அமைப்பே. பல கோரிக்கைகளை முன்வைத்து மனு ஒன்றை ஐ. நா. செயலருக்கு அனுப்பியுள்ளது.
தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பு மாநாட்டிலும் இந்த மனுவின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஜெனிவா
(6-ம் பக்கம் பார்க்க)

## படைக்கு மீண்டும் ஆள்திரட்ட முயற்சி

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக எதிர்வரும் 12-ம், 13-ம், 14-ம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என அரசு அறி
(6-ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமில் 25 ஜே. வி. பி. இளைஞர்

(கொழும்பு)
பலாலி இராணுவ முகாமில் தற்போது 25ற்கும் மேற்பட்ட ஜே. வி. பி. இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பலாலி இராணுவ முகாமிற்கு அண்மித்த பகுதியிலும் வசாவிளான் பகுதியிலும் படையினர் சுமார் 20 ஏக்கர் நிலப் பகுதியில் மேற்கொள்ளும் பயிர்ச்செய்கையில் இந்த ஜே. வி. பி. இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கப்டன் ஜெயந்த பெரேரா
(6-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் சமாதான முயற்சி சிங்கள கட்சிகள் மௌனம்!

(லண்டன்)
விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் பி. பி. சி.க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ள தமிழர் தாயகத்தின் பூரண முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அமைப்பு யோசனைக்கு தென் இலங்கையில் உள்ள பிரதான கட்சிகள் மௌனம்சாதித்து வருகின்றது என்று பி. பி. சி. தெரிவித்துள்ளது.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ இதுபற்றிய தமது கருத்துக்களை இதுவரைமுன்வைக்கவில்லை என்றும் பி. பி. சி. குறிப்பிட்டது.
இதேவேளை தீவிரவாதப் போக்குடைய சிங்கள கட்சிகளின் தலைவர்கள் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்ட
[6-ம் பக்கம் பார்க்க]

## தெற்கில்ஜே.விபி. வளர்ச்சிக்கு அரசு அதிகாரிகளும் உதவி?

(கொழும்பு)
தென்பகுதியில் ஜே. வி. பியின் துரித வளர்ச்சிக்கு அரச அதிகாரிகள் பலரும் துணை புரிவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.
ஜே. வி. பியின் பல நடவடிக்கைகள் அரசு அதிகாரிகளால் மறைக்கப்பட்டு வருவதாகவும் இது ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான உணர்வாலேயே வேண்டுமென செய்யப்படுவதாக இருக்கலாமெனவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.
இதேவேளை 'ராவய', 'யுக்திய', லக்திவ, லங்காதீப, ராஜாளி உட்பட பல பத்
(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் வைத்து மஹாபொல கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கொடுப்பனவுகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் வைத்தே வழங்கப்படவுள்ளது.
இவர்கள் போக்குவரத்துச் செய்வதில் உள்ள கஷ்டங்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறியதன் பேரிலேயே ஜனாதிபதி மகாபொல கொடுப்பனவை யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.
(159-ரி)

### பேச்சுக்கு புலிகள் விரும்பினால் அரசும் இணங்க வேண்டும்

அநுரா கூறுகிறார்

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு விருப்பம் தெரிவித்தால் அதற்கு அரசு இணங்குவதில் தவறில்லை என திரு. அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.
இதேவேளை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிடும் பட்சத்தில் இனப்பிரச்னை குறித்து அவற்றின் நிலைப்பாடு என்ன என்பதே தற்போது அவற்றின் முன்னுள்ள பெரும் பிரச்னையாக இருப்பதாக
6-ம் பக்கம் பார்க்க)

★ புலமைபரிசில் முடிவு நாளை கிடைக்கும்

(திருநெல்வேலி)
1991ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் நாளை திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.
இப்பரீட்சைப் பெறுபேறு
(6ம் பக்கம் பார்க்க)

**உளவாளிகள் ! ! !**

அவதானமாக இருக்கவும் - - - !

ஊருக்கு, தெருவிற்கு, புதியவராயின் யாரென்று அறிவது எம் கடமை.

## இராணுவ மேஜர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் உதிரிப்பாகங்களை அனுப்பிய இராணுவ மேஜர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கள்ளத்தனமாக மேற்படி
(6ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### ஆங்கிலக் கல்வி

இலேப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு:- சனி, ஞாயிறு காலை 8 00—10-00 மணி. 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (இ-7287)

### இசைக்கருவி திருத்துதல்

(Piano Repairs) பியானோ திருத்துதலும் ஓசை சீர் செய்தலும் மற்றும் இசைக்கருவிகளும் திருத்துபவர். தொடர்பு: T. கணேசன் பிரதான வீதி, மானிப்பாய். (அன்னம்மான் தேவாலயத்திற்கு அருகாமை) (இ-7292)

### விற்பனைக்கு

கோல்டன் கொமற் முட்டை இடும் இளம் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (இ 7293)

நெஷனல் M-3 வீடியோ கமரு, ரெக்னிக் ஒடியோ ஸ்பீட் டப்பிங் டெக், குளிர்பானச் சைக்கிள், விளையாட்டு அரங்குகளில் வைக்கக்கூடிய பெரிய அளவிலான TV கேம் முதலியன விற்பனைக்கு உண்டு மனேஜரன், இல. 23, B M C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (இ 7294)

### 'நீமியா உரம்'

கீரை வகைகள், துவரை, கனிவர்க்கங்கள் வீட்டு வளவுகளில் விளைவிப்போம். பயன் பெறுவோம். அதற்குப் பசளையாகவும், பாதுகாப்புச்சாதனமாகவும் உதவுவது 'நீமியா உரம்'. கிலோ ஒன்று கொண்ட பக்கற் ரூ. 18/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. —மில்க்வைற். (எ 2927)

### வெளிவந்துவிட்டது

சகல A/Lவிஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விபரத்துடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: A Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (எ 2941)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

பிறவுண் கலர் பொமரேனியன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையிடலாம் சி சிவசுப்பிரமணியம் மாஸ்டர் பிள்ளையார் கோவிலடி கோப்பாய், வடக்கு கோப்பாய். (சி-7295)


## தமிழ்த் தினப் போட்டிகள்

(கொழும்பு)

இந்த வருடத்துக்கான தமிழ்த் தினப் போட்டிகள், மே மாதம் 15ம் திகதிக்கு முன் நடத்தவேண்டும் என்று கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்குச் சுற்றுநிருபங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க


## இராசி பலன்

07-03-1993
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மாசி 24)

சதுர்த்தசி மாலை 6-25 வரை மகம் மு இ. 9-53 வரை. மரணயோகம் இராகு காலம் மாலை 4-55 முதல் 6-52 வரை. சுபநேரம் காலை 9-25 முதல் 10-55 வரை மாசி மகம்.

மேஷம்: இடையூறு, வீண் பழி, தொழில் அலைச்சல்.

இடபம்: முயற்சி விரைதல், பெண்பகை, இடநாசம்.

மிதுனம்: உறவினர் பாராட்டு, பணலாபம் இலாகம்.

கடகம்: பயனற்ற செயல், வயிற்றுவலி, பணமுடை.

சிங்கம்: சுபகாரியம், மரியாதை, அதிகாரப்பதவி.

கன்னி: சோபவார்த்தை, அவமானம், மனப்பதட்டம்.

துலாம்: பிறருக்கு உதவுதல், மனக்களிப்பு, காரிய சித்தி.

விருச்சிகம்: விரோதியின் வெற்றி. இனிய உறவு. பாராட்டு.

தனுசு: பணியால் கஷ்டம், இடமாறுதல், வெறுப்பு.

மகரம்: காரியத்தடை, மனக்கொதிப்பு, ருத்ரமோதல்.

கும்பம்: நற்பெயர், புதிய முதலீடு நண்பர் வருகை.

மீனம்: வீட்டில் மகிழ்ச்சி, தர்மகாரியம், நற்செய்தி.

ஜோதிடர்

## மரங்கள் தறிக்கப்பட்டு பாதுகாப்பு அரண் அமைப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் பாதுகாப்பு அரண்கள் அமைப்பதற்காக பயன்தரு மரங்கள் படையினரால் வெட்டப்பட்டு வருகின்றன.

தென்னை, பனை போன்ற பயன்தரு மரங்களே இவ்வாறு தறிக்கப்பட்டு ராணுவத்தினரால் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (தி)

## ஆசிரியர்க்கு ஊக்குவிப்பு பணம்

(திருநெல்வேலி)

யாழ். மாவட்ட ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள ஊழியர்கள் ஆகியோருக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவுள்ளது.

1990 - 12- 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் இவர்களுக்கு வழங்கப்படும்.

யாழ். கல்வித் திணைக்களம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக இந்தக் கொடுப்பனவு கிடைத்துள்ளது.

இதற்காக தேவைப்படும் பணத்தை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிவிக்குமாறு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தை மாகாணக் கல்வியமைச்சு கேட்டுள்ளது. (157-சி-இ)

## யாழ்ப்பாணத்திற்கு தேவைப்படும் உணவை அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு எவ்வளவு தொகை உணவு தேவைப்படுகின்றது என யாழ். அரச அதிபர் கூறுகிறாரோ அந்தத் தொகையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைப் பணிப்பாளர் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

காலநிலை தாமதத்தால் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்கள் இறக்குவதில் தாமதம் ஏற்படுகிறதென்றும் மாதாந்தம் 11 000 மெற்றிக்தொன் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு நான்கு கப்பல்களில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளரும் தெரிவித்துள்ளார். (சு-சி)

## எதிரணி கூட்டணிக்கு எம். ஈ. பி. எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக கூட்டணி ஒன்றை அமைக்கும் திட்டத்தை மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்த்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தத்திட்டத்தை மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்த்து வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-இ)

## தமிழ் இளைஞரிடம் லஞ்சம் பெற முயன்ற பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர், தமிழ் இளைஞர் ஒருவரைப் பயமுறுத்தி லஞ்சம் பெற முயன்றபோது, கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸார் இந்தப் பொலிஸ் அதிகாரியைக் கைது செய்தனர்.

கொழும்பில் பொலிஸ் அதிகாரிகள் பலர், இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகப் பல புகார்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-இ)


துர்க்கை அம்பாள் தேரேறி
வரும் காட்சி கண்டு
அருள் பெறுவோம்

**எஸ். ரி. மெடிக்கல்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2943)

துர்க்கை அம்பாள் தேரேறி
உலாவரும் காட்சி கண்டு
வாழ்வோமாக

**கரன்**
**வர்த்தக ஸ்தாபனம்**
772, காங்கேசன்துறை வீதி
தட்டாதெரு, யாழ்ப்பாணம்
(சி-2940)

துர்க்கை அம்பாள் தேரேறி
உலாவரும் காட்சி கண்டு வாழ்வோமாக

**க. வைரமுத்து அன் சன்ஸ்**
966, கே. கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
(எ- 2945)

துர்க்கை அம்பாள் தேரேறி வரும் காட்சி கண்டு
வாழ்வோமாக!

**TASTE LINE INDUSTRIES (Pvt.) Ltd.,**
NO: 14, Seenier Lane, Jaffna

தென்மராட்சியில் எமது பொருட்களை மொத்தமாகவும
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**அறிவகம்** கண்டிவீதி,
சாவகச்சேரி.
(ஏ-2942)


துர்க்கை அம்பாள் தேரேறி
வீதிவலம் வரும் காட்சிகண்டு உய்வோமாக

**புதிய குகானந்த பவன்**
கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.
(எ-2944)

உ
சிவமயம்
தேவி துணை — திரியம்பகி — துர்க்கை துணை

யாழ்.வண்-கிழக்கு-கலட்டி-எச்சாட்டி மஹாமாரியம்பாள் தேவஸ்தானம்

# இரதோற்சவ சிறப்பு மலர்




## தெய்வ மகிமை

ஆண்டாண்டு காலமாக மனித வரலாற்றில் அவர் தம் அறிவினால் வாழ்வியலைப் புரிந்துகொள்ளாமல் ஏதோ புரிந்து கொள்ளமுடியாத தன் அறிவைக் கடந்து ஒரு எல்லைக்கப்பால் தான் வாழ்வதற் கென்று தன் சமுதாயத்தை வழிநடத்தி ஒழுங்காக்கி, ஒற்றுமையாக, கூட்டுறவாகப் புரிந்துணர்வாக, மனித அறிவியலின் அர்த்தப்பாடான, மானிடவியலின் மேம்பாடான வாழ்வை அமைப்பதற்குத் திடசித்தமும், மனவுறுதிப் பாடும், அதற்கேற்றாற்போல பயன்பாடு கொண்ட மூல ங்களும், முதிர்ச்சி கண்ட மானிட அறமும், தார்மீகத் தாற்பரியங்களும் பெறப் பட்டு மானுடம் இதுவரை தன் வாழ்க்கையை வென்று கொண்டிருக்கின்றது தர்மத் தின் வாழ்வே மனிதத்தின் நிலைபேறாகும் என்றே மனித குலம் வாழத் தலைப்பட்டது. இதனால் உலக மூலவளங் களோடு அபிவிருத்தியும் அகண்ட அறிவியல் சாம்ராஜ் யமும் நிறையப் பெற்று, ஒரு அசைக்கமுடியாத ஓங்கிய, மாபெரும் பயன்பாட்டுச் சமுதாயமாக, உலகத்திற்கே அவசியமான, ஓர் உண்மை யான தத்துவார்த்தமான, அறிவியல் நிலையான, தவிர்க்க முடியாத ஒப்பற்ற மானிட மேசார்க்கத்தை. மோட்சத் தைப் பல ஆற்றலாலும் நிறை வித்து அமையப்பெற்ற தாய், பூமி அன்னையினுடைய ஒரு தெய்வீக மனிதனின் தாயகத் துக்கே விளைந்த எம் செல்வத் தைச் சிறப்பாய்ந்த மானிடத் திற்கே உரிய பெருவிருந்தை எஞ்ஞான்றும் நிலைக்கப்பெற்று ஒரு மாபெரும் மனித வர லாறு கண்ட நாமனைவரும் இன்றுவரை அதற்குத் தலை சாய்த்து முதல் வணக்கம் தந்து வாழ்வை ஒவ்வொரு மனித அடியொற்றிய பண் பாட்டை உடலியலாகவும், உள வியலாகவும் பேணிக்கொண்டு அதற்கப்பாலும் ஆண்டுகள் நிலைத்திட ஆண்டவன் வழி பாட்டைத் தவிர்த்திட முடி யாமல், தன்னையும் இழந்து விடாமல் தான் பெற்ற செல் வம் இவ்வையகம் என்று அந்த அமைந்ததன் வாழ் வும், பெற்ற அன்னை பூமி போன்று உலகிய உண் மையை, சத்தியத்தை நெறிப் படுத்தி, நிலையான பூமி அமைந்ததனால் மனிதன் முழு மையடைந்த மூத்த உலகம் இறைமையாகப் பரிணாமம் அடைந்து மனிதம் எய்தப்பட் டது வரவேற்கப்பட்டுள்ளது, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின் றது. இந்த வகையில் எமது ஆலயமும் பல ஆண்டுகளாக அமைந்து ஒரு நூற்றாண்டு வரலாற்றிலே எமது மனித சமுதாயத்தினருக்கு மானி டத்திற்கு ஒரு வாழ்வினைத் தரும் அணியிலே இற்றை வரை தன்னில் ஆன சகல வளங்களையும் கொண்டு ஓங்கி உயர்வாக ஒளிர்ந்து மகிழ்ச் சிப் பெருங்கடலில் தன் அடி யார்களை பிறப்பித்து வரு வதை நாம் பெருமனதுடன் உலகையுற்று உணர்ச்சி கொண்டு புளகாங்கிதம் அடைகிறோம். இந்த வகை யிலே எமது ஆலயத்தில் புதி தாக அமைக்கப்பட்ட அடி யார்கள் வேண்டி அருளும் ஸ்ரீ துர்க்காதேவியினுடைய வரவு எம்அனைவரின் போற்று தலுக்கும் வாழ்வின் நம்பிக்கைக்கும் உறுதியானதும் நிலையானதும் அசைக்க முடி யாததுமான மன இறுக்கத் தையும் வாழ்வின் வீரத்தை யும் பேருணர்ச்சியையும் புரிந்துணர்வையும் விளைவித்து ஆண்ட பண்பாடான பழைய அறிவியல் சமுதாயத்தை புதி தாக மெருகூட்டி பொலி வித்து பல எல்லைகளைக் கடந்து பாரிய தமிழ் வரலாற்றை தோற்றுவிக்கும் என்பது எமது அசைக்க முடியாத நம் பிக்கை. இந்த வகையில் இன்னமுந்து அருளியிருக் கின்ற ஸ்ரீ துர்க்கை தேவியினு டைய இரதோற்சவம் நடை பெறுவது எம்அனைவருக்கும்

(5-ம் பக்கம் பார்க்க)





## இறைவனின் அருட்செயல் அன்னையின் இரக்கம் போன்றது

இறைவனின் திருவருளால் உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் பெறுகின்றன. உயிர் களிடமிருந்து இறைவனுக்குக் கிடைக்கவேண்டியன ஒன்றும் இல்லை. பிரதிபலன் கருதாமல் நாம் ஒன்றையும் செய்வதில்லை இந்த எதிர்பார்ப்பு இல்லாமல் இயல்பான கருணையினால் இறைவன் உயிர்களுக்குச் செய்யும் கிருத்தியங்களை அருட்செயல்கள் என்கிறோம். அருட்செயல்களை அன்னையின்

க. சிவராமலிங்கம்

இரக்கம் என்று போற்றும் பண்பு மிகப்பழமையது. அருளாகிய இறைவன் கருணையை

(5-ம் பக்கம் பார்க்க)

## திருவுளங் கொண்ட தேவி துர்க்கை

இது அந்த தெய்வத்தின் திருக்கோவில் தேவியின்
திருவாலயம்
தெய்வ ஆணை எங்கே? அதிகாரமும் எங்கே?
கேட்டிடுவீர்
ஆம்! இது தெய்வத்தின் இணைக்களம்
இது தேவியின் சாம்ராஜ்யம்
திருநெறியும் இங்கேதான் தெய் வீகமும் இங்கேதான்
அன்போடு அடியார்கள் அவர்கள் அவதார புருஷர்கள்
தக்கபடி தாம் வாழ தருந்த திருவுள்ளம்
எஞ்ஞான்றும் இறைவியே எமையாளும் உமையே
- என்று
அன்றிலிருந்து இன்றுவரை ஆராதனை வழிபாடு
அவனியில் நாம் எடுத்த அழகான அறப்பாடு
எம் வாழ்வு உயர எண்ணி ஏக்கமுடன் உலகத்தில்
- இயம்பிட
யாரையா தவறிடுவர் தன்னாட்சி நிலைத்திடாமல்
நீங்காத இன்பமென நிலையான தெய்வீகம்
தெவிட்டாமல் துய்ப்பதற்கு துர்க்கையே வழியாவாள்
தானே தந்திடவே எம்பதியில் தோற்றிடுவாள்
நோயுற்ற அனைவரும் துன்பம் துயர் நோற்றோரும்
ஆகா! என்றிடவே அள்ளி நிதம் போற்றிடவே
அணையாத ஒளியொன்று ஒளிகிடவே வந்தவளே
நன்னொளி நாள் தரணியிலே தானரும்பி வந்தவளே!
கண்ணொளியின் கதகதப்பில் விண்ணொளியாய்
நிறைந்தவளே
என்னம்மா! என் தாயே! என்றிட்ட வேளையிலே
தம்மடியில் தானேதம் அடியாரைப் பார்த்திட்டு
உள்ளம் குளிர்ந்திட்டாள் அடியாரை - உச்சி
மோந்திட்டாள்
காலமெல்லாம் உம்முடனே நான் இருக்க
விளைந்திட்டேன்
நும்வினை அனைத்தும் போக்கிடவே நும்முடனே
வந்திட்டேன்
ஏன் இங்கு இல்லை எழிலார்ந்த சொர்க்கம் - நீவீர்
சொக்கிடவே இங்கு சோக்கான தார்மீகம் தன்னாட்சிச்
சுதந்திரத்தை
ஆக்கமுடன் அணைத்திட்டே அமுதமுமாய் பெற்றிடவே
கூடி வாழும் அடியாரே குவலயத்தில் கும்பிட்டே
எம்மக்கள் ஆக்கப்பணி செய்திட்டு அப்பணியில்
நாம் அகன்றிடாமல்
நின்றிட்டே எவ்வாழ்வை நிலைப்படுத்தி நிலைகுலையா
பெரும்பேற்றை
எண்ணி எண்ணி எச்சமின்றி அச்சமின்றி அன்பினையே
எம் இனியவளை துய்க்கின்ற தூயவளை துர்க்கையினை
தூரத்தில்
கண்டிடாமல் எம்அகத்தில் வாரும் எம்பதியில் பாரும்
- ஆம்
கலட்டியம் பதியில் பாரும் அதன் விந்தை தனைப்
பாரும்
வந்தனை என்றிடவே உங்களிடம் வந்திட்டேன்
என்றிட்ட
உமது நெஞ்சகத்துக் காரியம் வந்து நிதம் பார்த்திட்டு
நெஞ்சு கொஞ்சிடவே நீங்காமல் நல்வளம் பல
வாழ்வென்று
பதினாறு பெறும்பேறும் பளிச்சென்ற காட்சியுடன்
பாங்காக பெற்றிடுவீர் வாழ்ந்திடுவீர் பதியனைத்தும்
பூத்திடவே
மெய்யன்பர்களே, அடியார்களே உங்கள்
பாதாரவிந்தங்களில்
எம்திருத் தொண்டினை சமர்ப்பணம் செய்கின்றோம்
ஆலயத்தில் உம் பணியினை அழகாகச் செய்யுங்கள்
இது உங்கள் ஆலயம் - இது உங்கள் தெய்வம்
"நானே நீங்கள் நீங்களே நான் - நும்
வாழ்வை நிலைப்படுத்த நீவீர் வாரும் என்னுடனே
இங்கே"


வேலும் மயிலும்ஸ்
54, நியூமார்க்கட் - யாழ்ப்பாணம்

பிரதீபா ஜுவல்லர்ஸ்
கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்

தனுஜா நகை மாளிகை
190/5, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்

ரதி பென்ஸி கவுஸ்
53 A, நியூமார்க்கட் - யாழ்ப்பாணம்

# அச்சுப்பொறிவிற்பன்னர்மாயவர் அஞ்சலிமலர்

## இறைவன்பால் நம்பிக்கை கொண்டு செய்யும் தொழிலை தெய்வமாக மதித்த பெருந்தகை முத்துக்கிருஷ்ணன்!

ஈழமணித் திருநாட்டின் மகுடம்போல் விளங்கும் தமிழும் சைவமும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் எல்லோராலும் போற்றப்படும் மல்லாகம் சிற்றூரில் அவதரித்தவர் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணன். சிறுவயதிலே தந்தையை இழந்த முத்துக்கிருஷ்ணனுக்கு கல்வியைத் தொடரமுடியாத நிலையில்: தன் குடும்பப் பொறுப்பு அவர்மேல் சுமத்தப்பட்டதால், வேறுவழியின்றி ஒரு தொழிலைப்பழக வேண்டியநிலை ஏற்பட்டது.

இவரது நிலையை உணர்ந்த ஈழகேசரி பொன்னையா, அவரது திறமையைமதித்து அச்சுயந்திர திருத்துனராக சேவையில் அமர்த்திக்கொண்டார். இவருக்கு மேலதிக பயிற்சியைக்கூட பொன்னையா அவர்கள் கொழும்பில்வைத்து வழங்கியிருந்தார். இவரது விடா முயற்சியையும் தளராத ஊக்கத்தையும் கண்ட பலர் மாயக்கண்ணனடா அவன் என ''மாயவர்'' என அழைக்கலாயினர்.

அன்றிலிருந்து, அனைவராலும், 'மாயவர்' 'மாயவர்' என அழைக்கப்படலானார்.

தன்திறமையில் நம்பிக்கை வைத்த 'மாயவர்' காலஓட்டத்தில் தனக்கென ஒரு தொழிற்கூடத்தை 'சிவகுமாரன் தொழிற்சாலை'யென ஆரம்பித்து நடாத்திவந்தார். அன்றிலிருந்து அவரது திறமையை சகலரும் பயன்படுத்தினர்.

எந்த அச்சுக்கூடத்திலோ அல்லது பத்திரிகை நிறுவனத்திலோ அச்சுப் பொறிகளில் கோளாறு என்றால் ''போய் மாயவரை கூட்டிவாருங்கள் அவர்தான் இதில் என்ன பிழையென திருத்தித்தருவார்'' என்ற நம்பிக்கை அனைவர்மனத்திலும் நீக்கமற நிறைந்திருந்தது. தொழிலில் சிறந்த ஒருவராக எல்லோராலும் வாழ்வின் இறுதிவரை போற்றப்பட்டார்.

மு. அற்புததேவன்

அவருடைய அன்பு மனைவி நேசபூபதி அன்புச் செல்வங்கள் அற்புததேவன், புனிதவதி, சிவகுமாரன், பரமானந்தன், லோகேஸ்வரி, தெய்வசேனட்பிள்ளை, பூரணச்சந்திரா அனைவரும் தந்தையின் அரும் பண்புகளைப் பெற்றவர்களாவர். வந்தாரை வரவேற்கும் பாங்கு அவர்களிடம் இன்றும் இருப்பது பெருமை தருகின்றது.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாயவரைச் சந்திப்பதானால் அவரை சிவதலங்களில்தான் காணலாம். சிவபக்தரான அவர் கீரிமலை நகுலேஸ்வரர் மீதும், மாவிட்டபுரம் கந்தசுவாமியார் மீதும், தெல்லிப்பழை துர்க்கையம்மன் மீதும் மல்லாகம் காளியம்மை, சுன்னாகம் கதிரமலைச்சிவன் மீதும் நிறைந்த பக்தராவர். அவர் கோயில் வீதிகளில் நிறைபக்தராகவே காட்சி தருவார். அத்தவகையில் இறைவன் பால் நம்பிக்கைகொண்டு செய்யும் தொழிலை தெய்வமாக மதித்தவர். காலையில் எங்கு செல்வதானாலும் அவ இறைவழிபாடு செய்துதான் புறப்படுவார். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது அவரது நம்பிக்கை.

அவரைத் தேடிச்செல்லும் போதெல்லாம் வீட்டில் சிவபுராணம் படித்துக்கொண்டேயிருக்கும் குரலைக்கேட்டு



வேலுப்பிள்ளை
முத்துக்கிருஷ்ணன்
(மாயவர்)
தோற்றம்: 23-6-1925
மறைவு: 5-2-1993

''மாயவர்'' இருக்கிறார் என்பதை யாரும் குறியீடாக கொள்வது வழக்கம். பிற்காலத்தில் சிவதொண்டையே முத்தியின்பமாக கருதி பல கைங்கரியங்களை நிறைவுசெய்

(5-ம் பக்கம் பார்க்க)

## தட்டை அச்சுப் பொறி முதல் தானே இயங்கும் பொறி வரை 'மாயவரின்' தொழில் நுட்பம் மிளிர்ந்தது!!

எமது மண்ணில் அச்சுக்கலையின் வளர்ச்சியில் மாயவருக்கு தனியிடமுண்டு. தன்னுடைய தொழில் திறமையால் ஓடாது இயங்கமுடியாது என முடங்கிக் கிடந்த பல அச்சுப் பொறிகளை இயக்கி வைத்த பெருமைக்குரியவர்.

அவரது அயராத முயற்சியால் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாவனையில் இருந்த பல தட்டை அச்சுப்பொறிகளும் (PLATEN MACHINE) உருளிஅச்சுப் பொறிகளும் (CYLINDER MACHINE) இன்றும் யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

அத்தகைய பெருமைக்குரிய சாதாரணகுடும்பத்தில்பிறந்த ''மாயவர்'' இன்று எம்மிடமில்லை. காலன் அவரைக் கவர்ந்துவிட்டான். அவரது பசுமையான நினைவுகளும் அவர் தான் சார்ந்த துறையை பலரும் பாராட்டும்படி செய்த திறமையும் போற்றற்குரியது.

ஐயா. சச்சிதானந்தம்

எங்கள் பிரதேசத்தில் அச்சுப்பொறிகளை இயக்கும் இயந்திர இயக்குனர்கள் அனைவரும் கல்விசார் தொழில் நுட்பம் பெற்றவர்கள் அல்ல. பார்த்துப்படித்து தொழில் தெரிந்தவர்கள். அவர்களுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

## அச்சுக்கலையின் தமிழ் வரிவடிவம் யாழ்ப்பாணத்தில்தான் உருவானது

19ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்பட்ட அடியொற்றி வட்டமானதும், சிறிது சரிந்த வடிவமுள்ளதுமான அச்சுக்களை, பி. ஆர். ஹண்டு என்பவர் வின்ஸ்லோ தமிழ்-ஆங்கில அகராதியில் பயன்படுத்தியுள்ளார். இவர் தமிழ் எழுத்துக்களை பைக்கா (Pica), லாங் பிரைமர் (Long Primer) பிரிவியர் (Brevier) எனப் பல்வேறு அளவுகளில் உருவாக்கித் தந்தார்.

நியூயோர்க்கைச் சேர்ந்த லினே ரைப் நிறுவனத்தினர் இரண்டாம் உலகப் போர் மூளுவதற்கு முன், புதிய தமிழ் எழுத்துக்களை வார்க்க ஹண்டுவிடம் தேர்ச்சி பெற்றவர்களிடம் இருந்து எழுத்துத் துணைவிடும் கருவிகளைக் கடனுக்கப் பெற்று எழுத்துக்களை வார்த்தார்.

ஹண்டு அமைத்த முறை, தமிழ் அச்சு வடிவத்தில் சிறப்புள்ளதாகவும். தமிழ் அச்சு முகப்பு (Type Space) மிக அழகானதாகவும் இன்று வரை பேணப்படுகின்றது இப்பணிக்கு உதவியவர் ஆ. முத்துத்தம்பிப் புலவர் ஆவர்.

— எஸ்

## மலர் சிறப்புற அஞ்சலி செய்யும் நிறுவனங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ சுப்பிரமணிய<br>புத்தகசாலை<br>யாழ்ப்பாணம் | புனிதவளன்<br>கத்தோலிக்க<br>அச்சகம்<br>360, பிரதான வீதி<br>யாழ்ப்பாணம் | சாந்தி அச்சகம்<br>575, கே. கே. எஸ். வீதி<br>நாச்சிமார் கோவிலடி<br>யாழ்ப்பாணம் | ஸ்ரீ லங்கா<br>புத்தகசாலை<br>234, கே. கே. எஸ். வீதி<br>யாழ்ப்பாணம் | ஆனந்தா அச்சகம்<br>226, காங்கேசன்துறை வீதி<br>யாழ்ப்பாணம் |
| ஸ்ரீ சுப்பிரமணிய<br>அச்சகம்<br>யாழ்ப்பாணம் | சோதிடப்பிரகாச<br>அச்சுயந்திரசாலை<br>அச்சுக்கூட ஒழுங்கை<br>கொக்குவில் | மஹாலக்ஷ்மி<br>அச்சகம்<br>37, கண்டி வீதி<br>சுண்டிக்குளி<br>யாழ்ப்பாணம் | செ. சிவானந்தன்<br>பராசக்தி அச்சகம்<br>79, காங்கேசன்துறை வீதி<br>கொக்குவில் சந்தி<br>கொக்குவில் | ★<br>யாழ்.<br>மாவட்டக்<br>கூட்டுறவுச்<br>சபை |
| ஸ்ரீ காந்தா அச்சகம்<br>ஸ்ரீ காந்தா<br>புத்தகசாலை<br>330, காங்கேசன்துறை வீதி<br>யாழ்ப்பாணம் | பாரதி பதிப்பகம்<br>(A. B. PRINTERS)<br>யாழ்ப்பாணம் | ஆசீர்வாதம்<br>அச்சகம்;<br>புத்தகசாலை<br>50, கண்டிவீதி<br>யாழ்ப்பாணம் | சைவபரிபாலன<br>சபை<br>இந்து சாதனம்<br>சைவப்பிரகாச<br>அச்சுயந்திரசாலை<br>450, காங்கேசன்துறைவீதி<br>யாழ்ப்பாணம் | அச்சகம்<br>நாவலர் ரோட்<br>யாழ்ப்பாணம்<br>★ |

# உணவுப்பொருள் மோசடி பொலிஸ் தீவிர விசாரணை

(கொழும்பு)

வடபகுதிக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருட்களின் மோசடி தொடர்பாக இரகசியப் பொலிஸார் துருவித் துருவி விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றனர்.

இதில் சம்பந்தப்பட்ட நபர்கள் இன்னும் ஒரிரு வாரங்களில் கைதுசெய்யப்படுவார்கள் என இரகசியப் பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் வடபகுதிக்கு அனுப்பப்பட்ட உணவு வகைகளின் விபரங்களை திரட்டும் வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இரகசியப் பொலிசார் ஓடிட் ரிப்போட் கேட்டுள்ளதாகவும் அது கிடைத்த பின்னர் உணவு மோசடி நபர் வேட்டை தொடங்கிவிடும் எனவும் இரகசியப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## தட்டை அச்சுப்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் தொழில் கற்பித்த "குரு"வாயவர்தான். இந்தப் பெருமையும் அவருக்குண்டு

அவரை நான் பல அச்சகங்களில் போதனாசிரியராகவே கண்டிருக்கிறேன். அவர் அச்சுப் பொறிகளை இயக்குபவர்களுக்கு அடிக்கடி செய்யும் உபதேசம் இதுவாகத்தான் இருந்தது. "எப்பொழுதும் நல்ல மையுருளைகளே அச்சடிப்பதற்கு இன்றியமையாதனவாகும். அவை பருமனில் கூடியோ குறைந்தோ இருக்க கூடாது. அவை கடினப்பட்டால் அளவில் குறையும். பூரித்தால் அளவில் கூடும். பொதுவாக மையை ஒட்டிக் கொள்ளும் திறமையை எவ்வளவு அதிகமாக பெற்றிருக்கிறதோ அவ்வளவுக்கு மையுருளை சிறந்ததாக இருக்கும். அழுத்தப்பட்டால் அழுத்தி மீண்டும் பழைய அளவிற்கே வரக்கூடிய உருளை மிகவும் மேலானதாகும். தொட்டால் மெதுவானதாகவும், வரட்சி அற்றதாகவும் உருளை இருக்கவேண்டும். தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றதுபோல உருளைகளைப் பாதுகாத்து வைத்தால் அவை நீடித்து உழைக்கும். எப்பொழுதும் உருளைகளை பாதுகாப்பதன் மூலம் ஒரு அச்சுப்பொறியில் இருந்து சிறந்த பதிப்புக்களை உருவாக்கலாம் என போதித்து வருவார். அது அவருடைய அனுபவம்.

தனது திறமையிலே நம்பிக்கை வைத்த உழைத்தவர் "மாயவர்" படாடோபம் என்பதை ஒருபோதும் நாம் அவரிடம் கண்டதில்லை. வார்த்தைகளை அளந்து பேசி தன்பணியை முடித்துக் கொடுத்தவர். பகலானாலும் இரவானாலும், யார் அழைத்தாலும் செய்யும் தொழிலே தெய்வமென கூப்பிட்டவருக்கு மதிப்புக் கொடுத்த நல்ல "தொழிலாளி" நம்மிடையே இல்லை என்கிற போது மனம் வேதனைப்படுகின்றது. அவரது ஆத்மா சாந்தியடைய நாம்பிரார்த்திப்பது எம்கடமை.

---

## இறைவன்பால்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வார். தான்செய்த புண்ணியத்தினால் தெய்வீக சிந்தை கொண்ட முத்துக் கிருஷ்ணன் 05-02-1993-ல் ஆலய வழிபாட்டை முடித்துக் கொண்டு மக்களுடன் அளவளாவிக்கொண்டிருந்தபோது இறைவன் அவரை ஆட்கொண்டதில் வியப்பில்லை. கூப்பிட்ட ஆலுக்கு அபயம் கொடுத்து முத்தியடைந்தார். அழியும் இந்தத் தேகத்தை விட்டு, அழியாப் புகழ் விளங்கும் இறைவனின் ஆனந்த மயமான முத்தியின்பத்தை நாடிப் பூதவுடலை நீத்து, புகழுடம்பைத் தேடிக்கொண்டார்.

அன்னார் வாழ்ந்த காலம், அவர் செய்த அருஞ் செயல்கள் யாவும் என்றும் அழியாப் புகழுடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பது அவரது வாழ்க்கையின் படிப்பினை என்றால் மிகையாகாது.

---

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலர்கள் பயிற்சி நெறி கடந்த மாதம் 6ம் திகதி முதல் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றுவருகின்றது. தற்போது இடம்பெற்றுவரும் முதல் தொகுதி பயிற்சி நெறியில் 100கிராம அலுவலர்கள் பங்குபற்றி வருகின்றார்கள்.

---


# 31ம் நாள் நினைவஞ்சலி



## சந்திரவர் சிதம்பரப்பிள்ளை

(பொன்னையா மாஸ்டர்)

[முன்னாள் அதிபர் அருணோதயாக் கல்லூரி அளவெட்டி]

மலர்வு: 10-09-1909 உதிர்வு: 05-02-1993

அளவையம்பதி எனும் மரத்தின் ஓர் இனிய பழம் உதிர்ந்தது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக

நிர்வாக சபை,

ஞானவைரவர் ஆலயம்

கேணிக்கரை அளவெட்டி. (இ-7296)


---

## இறைவனின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயன்பாகக் கண்டு, அதற்கு அம்மையாக அம்பாளாக உருவகித்த பெருமை இந்துக்களின் தனிப் பெருமை.

இந்த அம்மையை இறையருளை பலவாறு கண்டு வணங்குகிறோம். போகங்களைத் தரும்போது பவானியாகவும், புருட லட்சணங்களைத் தரும்போது விஷ்ணுவாகவும், தீமையைச்சாடி அழிக்கும்போது காளியாகவும், குரோதத்தை வெல்லும் போது துர்க்கையாகவும் வழிபடுகிறோம். எல்லாம் ஒருவனே நினது. அருட்தொழில் வேறுபாடு காரணமாக வெவ்வேறு நாமங்களைப் பெறும் பராசக்தியைப் போற்றிப் பணிந்து வளம்பட்ட இனம் தமிழ்இனம்.

இனத்தின் இன்னல்கள்நீங்க அவளை வணங்குவதைத்தவிர வேறுவழி நமக்குத் தெரியவில்லை. வணங்கி வாழ்ந்து வாழ்விக்க எமக்கு அவள் அருள் தருவாளாக.

---

## தெய்வ மகிமை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்தற்கரிய நற்பேறுகும். மிகவும் அடிப்படைகொண்ட வாழ்வாகும் என்று அறம் போற்றும் உலகியலாளர்களின் ஆசியுடனும் உபயத்துடனும் அனைவரையும் பணிந்து கொள்வோமாக.

தேசியத்தின் - தெய்வீக வாழ்வின் ஸ்ரீதுர்காதேவியின் பாதங்களை, பாதாரவிந்தங்களை சரணடைந்திடுவோமாக.

பரிபாலன சபையும்,
தேர்திருவிழாக்குழுவும்,
அடியார்கள் அனைவரும்,
அறிவுசார்ந்த பெரியோரும்,
எம்மை தாயாக தேசியத்தில் வழிநடத்தும் மானிடம் ஆய்ந்த அறவோரும் அதனால் இறைமை கொண்ட தேசிய தெய்வீக தாயகத்தின் பரிணமமுள்ள மக்களனைவரும்

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மாசிமக இலட்சார்ச்சனை பூர்த்திவிழா இன்று 7-ம் திகதி நடைபெறவுள்ளது. இன்று காலை முதல் மாலை வரை விசேட பூசை வழிபாடுகள், இலட்சார்ச்சனை வேதபாராயணம் மற்றும் அம்பாள் வீதியுலா வருதலும் இடம்பெறவுள்ளன. (க)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள உள்ளூர் வளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் கண்காட்சி இன்று காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் இக்கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

உள்ளூர் உற்பத்தியிலிருந்து உணவு தயாரித்தல் சம்பந்தமான நூல்வெளியீடும் பரிசளிப்பு நிகழ்ச்சியும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது. (க)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் திருமஞ்சனக் கிணற்று சாந்திக்கிரியையும் விசேட பூசையும் இன்று காலை 7-00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (க)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்

கொழும்புத்துறை ஆதிபம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் ஆலய இரதோற்சவம் இன்று காலை 8-00 மணிக்கு இடம் பெறும். (க)

---

# இலவச சீருடை வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ் மலேரியா தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த 1991, 1992-ம் ஆண்டுகளுக்கான உத்தியோக பூர்வ சீருடைகள் இதுவரை கிடைக்கவில்லை.

பொது சுகாதார வெளிக்கள உதவியாளர்கள், தெளிகருவி இயக்குநனர்கள் ஆகியோருக்கு காக்கி நிறத்திலான சீருடைகள் வழங்கப்படுவதாகவும், கடந்த 1991ம் ஆண்டில் இந்த காக்கிநிற சீருடைத்துணிகள் கொழும்பிலிருந்து திணைக்கள லொறி மூலம் கொண்டுவரப்பட்டபோது வவுனியா இராணுவ தடை முகாமில் பரிசோதனையின்போது பறிமுதல்செய்யப்பட்டது என்றும், இதன் பின்னர் மேற்படி சீருடைத் துணிகள் இங்கு கொண்டுவரப்படவில்லை என்றும் இதுபற்றி தெரிவிக்கப்படுகிறது.

வேறு நிறத்திலான சீருடை துணிகள் தமக்கு வழங்குமாறு இந்த ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அறியப்படுகின்றது. (72)

---

# கச்சதீவுப் பகுதியில் மீன்பண்ணைகள்

(சென்னை)

கச்சதீவுப் பகுதியில் 5கோடி ரூபா செலவில் இரு பாரிய மீன் பண்ணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்தியகடல் துறை ஏற்றுமதி அபிவிருத்திகழக இயக்குநர் அண்மையில் கொச்சியில் தெரிவித்தார்.

டென்மார்க் அரசின் உதவியுடன் இம்மீன் பண்ணைகள் அமைக்கப்படும் என்றும் இதன்மூலம் வருடாந்தம் 10 கோடி ரூபா பெறுமதியான மீன்களை பிடிக்கமுடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஏ)

---

## மட்டு. எல்லையில்

# ஏழாயிரம் சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்கள்

(மட்டுநகர்)

மட்டுநகர் எல்லைப்புறங்களில் 7 ஆயிரம் முஸ்லிம், சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து அகதிகளாக வெளியேறி பொலநறுவையில் தங்கியிருந்தவர்களை மீளக்குடியமர்த்துவது என்ற போர்வையில் இந்தக்குடியேற்றம் நடாத்தப்பட இருப்பதாகக்கிடைத்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. - வி

---

## தெருக்கூத்து

(புலோலி)

நாளை நடைபெறவுள்ள சர்வதேசமகளிர் தினத்தையொட்டி வடமராட்சிப் பகுதியில் கிராமங்கள் தோறும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் "விழித்தெழுவோம்" என்ற தெருக்கூத்து நடாத்தப்பட்டு வருகிறது. (61-சி)

---

## சைக்கிள் திருட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறையிலுள்ள பன்னையம்பதிஎன்னுமிடத்தில் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் இரவு வேளையில் களவாடப்பட்டுள்ளது.

இ பாலகிருஷ்ணன் என்பவரது வீட்டிலேயே இச்சைக்கிள் திருட்டு இடம்பெற்றுள்ளது. இதுபற்றி பருத்தித்துறை காவல்துறையில் முறையிடப்பட்டுள்ளது. (160)

---

ஃ ஃ ஃ

(மானிப்பாய்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவின் தையல் பொருட் கண்காட்சி இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (71)

ஃ ஃ ஃ

(கொழும்புத்துறை)

வடக்கு கிழக்கு மாகாண சபை உள்ளூராட்சி சேவை சித்த ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். மாநகரசபை மத்திய வைத்தியசாலை மண்டபத்தில் இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறும். (154)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவிலில் இன்று நவசக்தி அர்ச்சனையும் சங்காபிஷேகம் மற்றும் தீப பூசையும் இடம் பெறவுள்ளன. மாசி மகத்தை முன்னிட்டே இவ் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. (க)

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று மாலை 3-00 மணிக்கு திருவிளக்கு பூசையும் அதனைத் தொடர்ந்து மாலை 4-30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று அம்பாள் வீதி வலம் வருதலும் இடம் பெறும்.

---

## சாளரம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

மார்ச் - ஏப்ரல் மாதத்துக்கான 'சாளரம்' வெளிவந்துள்ளது. இந்த இதழில் விறகுகாரன்-கவிதை, 'தமிழோசை' ஒளிநாடா திரைப்பட விமர்சனம், பதவிக்கு வரும் அரசும் பாழ்படு விளைநிலமும் - கட்டுரை, மன்னார் மாவட்டத்தின் கல்விநிலை-ஒரு நோக்கு, கணனிகளும் மம்மிகளும், 'களங்களை வென்ற வேகத்தில் மனங்களை வென்றுய்' - கேணல் கிட்டு பற்றிய கவிதை போன்ற பல விடயங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (சு)

---

## தவக்கால நற்சிந்தனை

ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது, அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை" (சங் 33 : 4) எமக்கு சீரிய வாழ்வு அளிக்க வல்ல வார்த்தைகள் அவருடைய வார்த்தைகளே. அந்த வார்த்தையின் படி நாம் நடக்க வாழ, நாளும் அந்த வார்த்தைகளை படிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். நமது ஆன்மீக வாழ்வு அவருடைய வாழ்வின் இலக்கை அடைய மாற்றம் அடைய வேண்டும்.

மோ. தார்சீசியஸ்.

# அனைத்துலகமகளிர்தினத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி

## கோண்டாவிலில் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)
அடக்குமுறையிலிருந்து பெண்ணினம் மாத்திரம் அல்ல, அனைவரும் விடுதலை பெற நாமனைவரும் அணி திரள்வோம். அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8-ம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

நாளை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தோடு முடிவடையும்.

இவ் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் சகல மாதர் அமைப்புக்களையும், பொதுமக்களையும், பொதுப் பணி மன்றத்தின் சகல அங்கத்தினர்களையும் கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் பொதுஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (161-56-சி)

# உணவுக் கப்பல் சேவை தொடர்ந்து நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான மூன்று மாத உணவுப்பொருள்கள் களஞ்சியப்படுத்தப்படும் வரை கப்பல் சேவை தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் விசேட உத்தரவின் பேரில் இந்த ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

குமண, குமாரி, வாதுவை, நிக்கிரி, மெனிஹல் ஆகிய கப்பல்கள் இச்சேவையிலீடுபடுத்தப்படும். குறைந்தது வாரத்தில் ஒரு தடவையேனும் இக்கப்பல்களில் ஒன்றில் பருத்தித்துறைக்கு உணவுப்பொருட்கள் எடுத்துவரப்படும்.

யாழ். மாவட்டத்திற்கு மூன்று மாதங்களுக்கு தேவையான இந்த உணவுப்பொருள்கள் காங்கேசன் துறையில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (159-சி)

# மூலிகை மருந்தால் எயிட்ஸுக்கு சிகிச்சை

(சென்னை)
மனித குலத்தை அச்சுறுத்தி வரும் எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்த 'மூலிகை மருந்து' பரீட்சார்த்தமாக பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் இம் முயற்சி வெற்றியளித்துள்ளதாகவும் சென்னை "இன்பாக்ட்" மருத்துவ ஆய்வுக் குழுத் தலைவர் டாக்டர் குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: எயிட்ஸால் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதில் 7 பேருக்கு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டதாகவும் மிகுதி 5 பேருக்கு எடைக்குறைவு ஏற்படவில்லை என்றும் இது ஒரு நல்ல முன்னேற்றம் என்றும் குறிப்பிட்டார். (சு-சி)

# தொலைபேசி நிலையத்தை தகர்க்க முயற்சி

(சென்னை)
வேதாரணியம் அருகே தொலைபேசி நிலையம் ஒன்றை குண்டு வைத்து தகர்க்க முற்பட்டதாக புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

தற்போது தமிழக கரையோரப் பகுதிகளில் புலிகளினதும் ஆதரவாளர்களினதும் நடமாட்டம் குறித்து பொலிசார் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டுள்ளனராம். (சி)

புலிகளை கண்காணிக்க

# தமிழக கடலில் பீரங்கிக் கப்பல்கள்

(சென்னை)
தமிழகம் கோடியாக்கரையில் நவீன வசதிகளுடன் கூடிய இரு பீரங்கி ரோந்துக் கப்பல்களை இந்திய கடற்படை நிறுத்தியுள்ளது.

அண்மையில் காரைக்கால் கடற்பகுதியில் புலிகளினுடையது என சந்தேகிக்கப்படும் கப்பல் ஒன்று கடற்படையால் கைப்பற்றப்பட்டதாம்.

கோடியாக்கரையில் நிறுத்தப்பட்டுள்ள இரு நவீன கப்பல்களும் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படவுள்ளனவாம். (சி)

# வடக்கே தார் அனுப்ப கூட்டுப்படை அனுமதி

(யாழ்ப்பாணம்)
வடபகுதிக்கு தார் பரல்களை எடுத்துச் செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக 500 பரல் தார் வடபகுதிக்கு அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத் தார் பரல்கள் வந்ததும் யாழ் நகரின் பிரதான வீதிகள் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்படும். (159-ரி)

பிரபாவின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சமஷ்டிக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் எனவும் அவதானிகள் கூறுகின்றனர். (சு-சி)

படைக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வித்தள்ளது.

ஏற்கனவே அரசு பல தடவை படைக்கு ஆள் திரட்ட முயற்சித்தும் அது வெற்றியளிக்காமல் போனதும் குறிப்பிடத்தக்கது. (இ-சி)

பேச்சுக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
"சண்டே ஐலண்ட்" கூறியுள்ளது.

இனப்பிரச்னை தீர்வு குறித்து ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு யோசனையை கொண்டுள்ளதால் இவற்றுக்கிடையே தேர்தல் கூட்டு ஏற்படுவதில் தொடர்ந்தும் இழுபறி ஏற்பட்டு வருகிறது. (சி)

# உணவுப் பொருட்களுடன் குமண வந்தது

(நெல்லியடி)
கொழும்பிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் உணவுப் பொருட்களுடனும், தபால் பொதிகளுடனும் நேற்றுமுன்தினம் மாலை காங்கேசன் துறையை வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் யாழ். அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகரும், கெயர் நிறுவன அதிகாரிகளும், பொருட் அதிகாரிகளும், பிரெஞ்சு வைத்திய குழு டாக்டர் ஒருவரும் வந்தனர். இவர்கள் காங்கேசன் துறையிலிருந்து குமாரி கப்பலில் நேற்றுக்காலை 8 மணிக்கு பருத்தித்துறையை வந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் நயினாதீவில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பிடியில் தனது போத்தியுடன் பெற்றோரை தவறவிட்ட நிலையில் வசித்த 11 வயதுச்சிறுமியான செல்வி பாலசுப்பிரமணியம் பிரமிளாவையும் யாழ். அரச அதிபர் கூட்டி வந்தார். (160-சி)

இராணுவ
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
உதிரிப்பாகங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார் என்ற சந்தேகத்தின்பேரில் இவர் கைதுசெய்யப்பட்டார்.

இவரது வீட்டை திடீர் சோதனை செய்தபோது இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மின்சாரப் பொருட்களும் மற்றும் உபகரணங்களும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. (இ-சி)

# செவ்வாய் இறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் குமண கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந்ததும் பொருட்களை இறக்கும்பணி ஆரம்பமாகும்.

இதற்கிடையில் பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போது உணவுப்பொருட்களை இறக்கிக்கொண்டிருக்கும் குமாரி கப்பலிலிருந்து நேற்று 580 மெற்றிக் தொன் மா இறக்கப்பட்டுள்ளது.

குமணவில் வந்த தபாற் பொதிகள் செவ்வாய் எடுத்து வரப்பட்டு புதன் அல்லது வியாழன் தபால் விநியோகம் இடம்பெறலாமென தெரிய வருகிறது. (159-ரி)

# எதிரணி கூட்டணி செவ்வாய் பதிவாகும்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட ஒன்றிணைந்துள்ள கூட்டணி அமைப்பு செவ்வாய்க்கிழமை தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாக பதிவுசெய்யப்படவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மகாஜன எக்சத் பெரமுனைக்கு 40 ஆசனங்களும், சமசமாஜக் கட்சிக்கு 35 ஆசனங்களும், கம்யூனிஸ்கட்சிக்கு 37 ஆசனங்களும் கொடுப்பதோடு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்னூற்றுக்கு மேற்பட்ட ஆசனங்களில் போட்டியிடுவதாக உடன்பாட்டுக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு-சி)

தெற்கில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திரிகைகளும் ஜே. வி. பியின் வளர்ச்சிக்கு பெரும் ஆதரவு காட்டி வருவதாக 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது. (சி)

## மரண அறிவித்தல்

### திரு. செ. முத்துக்குமாரசாமி சர்மா

(அதிபர், யா/வல்வெட்டித்துறை இ. த. க. பாடசாலை)

பருத்தித்துறை சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும், தம்பசிட்டியை வசிப்பிடமாகக்கொண்டவருமான திரு. செ. முத்துக்குமாரசாமி சர்மா (S. M. சர்மா) அவர்கள் 5-3-93 வெள்ளி அன்று இரவு இறைபதமெய்தினார். இவர் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ செகந்நாதக்குருக்கள் தம்பதியினரின் அன்புமகனும் வைத்தியநாத ஐயரின் மருமகனும், பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற பாஸ்கரக்குருக்களின் மருமகனும், காமாட்சி (கௌரவ. ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், கௌரிசங்கரி, கிரயுளா, உமாசங்கரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சநாதம், நாராயணன், இரத்தினசபாபதி, நீலாயதாட்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-3-93 சனிக்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(எ-2949) தகவல்: பா. பஞ்சநாதம்

புலமைப் பரிசில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கள் காலதாமதமாகிய பின்னர் குமணக் கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டு யாழ் கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் நாளைக் காலை இப்பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம். (157-சி)

திருமலை சிறையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாயும் சகோதரியும் தங்கியுள்ளனர். ஜே. வி. பி.யின் வன்முறைகளால் உயிரிழந்த படையினரும், அவரது குடும்பத்தாரும் பழிவாங்கும் நோக்கில் ருகுணவின் குடும்பத்தினரை கொலை முயற்சித்து வருவதாலேயே இவர்கள் மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளனராம்.

பலாலி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளார்.

இங்கிருந்த பல முகாம்களுக்கு மரக்கறி வகை விநியோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

யூ. என். எச். சி. ஆர்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னர்.

நேற்று முன்தினம் பலாலியை வந்தடைந்து நேற்றுக் காலை குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த யு. என். எச். சி. ஆர். இலங்கைப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கலஸ்ஸும், யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. சு. அசோக்குமாரும் இன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளனர்.

இவர்கள் இன்று நடாத்தும் பேச்சுக்களின் முடிவுகளின் பின்னரே இப்பிரதிநிதி யாழ். நகரில் சில நாட்கள் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் டாக்டர் பீற்றர் நிக்கலஸ் நேற்று யாழ். ஆயர் அருட்திரு தோமஸ் சவுந்தர நாயகத்தைச் சந்தித்து உரையாடினார். (157-சி)

வடக்கு கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மாநாட்டில் இலங்கை மீது பெரும் நெருக்கடி ஏற்படுமெனவும் அவதானிகள் கூறியுள்ளனர்.

இந்த மாணவர் அமைப்பில் தென்பகுதி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பல இளைய மாணவர்கள் உறுப்பினர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (சி)

கொழும்பில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யில் தமது பொருட்களை விற்பனை செய்யத் தயாராகிக் கொண்டிருந்தசிறுவியாபாரிகள் மீது நேற்றுக் காலை திடீரென அப்பகுதிக்கு வந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இரு நபர்கள் கண்டபடி சுட்டதில் ஐந்து பெண்கள் இரு ஆண்கள் என ஏழு பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இது குறித்து புலன் விசாரணையில் இறங்கிய பொலிசார் கொழும்பில் தலைமறைவாகச் செயற்படும் போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தோரே இதனை நடத்தியிருக்கலாமென கூறியுள்ளனர்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under licence Number B/10336/B